# கைக்குண்டு வீச்சு! அமைச்சர் வீட்டுக்கு!

பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆவணி 13 றமழான் 13 இதழ் 198

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-8-77

(கொழும்பு)

கடந்த இரண்டு வார காலமாக நாட்டின் பலபகுதிகளிலும் நிகழ்ந்து வந்த வன் செயல்கள் தற்போது குறைந்து, மாமூல் நிலைமைக்கு நாடு திரும்பிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், சில இடங்களில் வீட்டு வீட்டு அசம்பாவிதங்கள் நிகழ்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அமைச்சர் ஒருவரின் வீட்டுக்கு கைக்குண்டு வீசப்பட்டதாகவும் ஆனால் சேதம் எதுவும் அதிகமாக ஏற்படவில்லை என்றும் தெரிய வருகிறது.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் ஜி. சிறில் மத்யூ வீட்டுக்கே கைக்குண்டு வீசப்பட்டது.

நேற்றிரவு, ஒலிபரப்பான அகில இந்திய வானொலியின் செய்திகளின்படி பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 10,000-க்கும் அதிகமான அகதிகள் நாட்டின் வடபகுதி நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்றும் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அமைச்சர்களின் வீடுகளுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இறந்தவர்களின் தொகை எழுபதுக்கும் அதிகம் என்றும், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து இதுபற்றி முழு விசாரணைகள் நடைபெற கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

## தாக்கப்பட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

பேராதனை வளாக விவசாய போதனா பீடத்தைச் சேர்ந்த 21 தமிழ் மாணவர்கள் பயிற்சிக்காக அனுராதபுரம்-புளியங்குளம் இயந்திரப் பயிற்சி முகாமில் இருந்த சமயம், வன்செயல்களினால் தங்கள் உடைமைகளை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவர்கள் தாக்கப்பட்டது குறித்தும் உடைமைகள் இழப்பு சம்பந்தமாகவும் யாழ்ப்பாண எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரனுக்கு தகவல் அளிக்கும்படி இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஜெ)

# பொலிசுடன் சமூகசேவை பிரதிநிதிகளும் காவல்!

## யாழ். வந்த உயர் குழு எடுத்த தீர்மானம்

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டபின்னர் யாழ்ப்பாணத்தில் நிலைமை சீரடைந்துள்ளது. யாழ். நகரில் இரவில் பொலிசார் ரோந்துக் காவலில் ஈடுபடும்பொழுது அவர்கள் எந்தப்பகுதிக்குச்செல்கிறார்கள் எந்தெந்த இடத்தில்நிற்கிறார்கள் என்பதுகுறித்து 'வயலர்ஸ்மூலம்' அதற்குப்பொறுப்பான உதவிப்பொலிஸ் அதிபருக்குத் தகவல் கொடுத்துக்கொண்டிருப்பார்கள்.

### பொலிசாருடன் தொண்டர்கள்

யாழ். நகரில் பொலிஸ் ரோந்துக்காவலில் ஈடுபடும்பொழுது அவர்களுடன் ரோட்டரி,லயன்ஸ் கழகம்போன்ற சமூகசேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை அல்லது தொண்டர்களையும் அழைத்துச்செல்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது,

### உயர் அதிகாரிகள்குழு வந்தது

அமைச்சரவையின் செயலாளரும் முன்னைய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு. ஜி வீ. ரி. சமரசிங்கா, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜயசிங்கா, இராணுவத் தளபதி சோபால அட்டிக்கல, பிரதமரின் அந்தரங்கச் செயலாளர் திரு. மெனிக்டிவெல ஆகியோரைக் கொண்ட உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துதிரும்பியது. சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினத்துடன் கொழும்பிலிருந்து விசேஷ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்த இந்தக் குழு இரண்டு தினங்களுக்கு முன் யாழ். பஸ் நிலையத்திற்கு அருகில் 25 கடைகள் எரிந்து தரைமட்டமாகிய இடத்தையும் எரிந்து விழுந்து இடிபாடுகளாகக் காட்சிதரும் பழைய மார்க்கட் கட்டிடப்பகுதியையும் பார்வையிட்டனர்.

குச் சட்டம் அமுலிலிருந்த போதே அவர்கள் இவ்வித செயல்களில் ஈடுபட்டதாகவும் அறியப்படுகிறது. இதற்கு இம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. ஜி. வி பி. சமரசிங்கா பதிலளிக்கையில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின் ரயில் நிலையத்துக்குமுன்னுள்ள ஒரு பேக்கரி தீவைக்கப்பட்டதற்கு யார் காரணம் என்று கேட்டதாகவும் அறியப்படுகிறது.

### கச்சேரியில் நடந்த மாநாடு

யாழ்ப்பாணம் வந்த உயர் அதிகாரிகள் குழு யாழ் மாவட்ட இணைப்பதிகாரி திரு ருத்ரா ராஜசிங்கம், பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ.எல். விஜயபாலா, யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ் செனிவிரத்தின மற்றும் அரசாங்க பொலிஸ் அதிகாரிகளுடன் மாகாநாடு கூட்டி ஆலோசனை நடத்தினர்.

இதன்பின் தமிழர் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், வி.யோகேஸ்வரன், முன்னாள் செனட்டர் சு. நடராசா ஆகியோருடனும் இந்த உயர்குழு ஆலோசனை நடத்தியது.

இந்த ஆலோசனைகளின் பின்னரே யாழ். மாநகர எல்லைக்குள் பொலிஸ் ரோந்துக் காவல் பற்றிய மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்தமகாநாட்டில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், யாழ். நகரில் நடைபெற்ற தீவைப்புச் சம்பவங்களுக்கு யாழ். பொலிசாரே காரணம் என்று கூறியதாகவும் ஊரடங்

### 'சூட்கேஸ்' யாருடையது?

யாழ்ப்பாணம்,திங்கள்

புத்தளத்தில் இருந்து 22-ந் திகதி இரவு யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்ட ஒரு பஸ்ஸில் தவறவிடப்பட்ட பெரிய அளவிலான 'சூட்கேஸ்' ஒன்றை பஸ்சாரதி திரு. ஆர். சண்முகரெத்தினம் யாழ்ப்பாண டிப்போவில் ஒப்படைத்துள்ளார். 'சூட்கேஸின் உரிமையாளர் போதுமான அத்தாட்சிகாட்டி 'சூட்கேஸைப்' பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஜெ]

### பாதுகாப்புச் சேவை

யாழ். நகரில் பாதுகாப்புச் சேவை புரிந்துவரும் கொம்மேஷல் பாதுகாப்புச் சேவையினர் தொடர்ந்தும் தமது சேவையைச் செய்வதற்கு அனுமதிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. நகரில் எந்தவித சம்பவங்கள் நிகழ்ந்தாலும் அவற்றை உடனுக்குடன் பொலிஸார் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

### யாழ். நகரில் தீயணைப்பு நடவடிக்கை

யாழ். நகரில் சமீபத்தில் ஏற்பட்ட தீவிபத்துக்களைத் தொடர்ந்து யாழ். நகரில் தீயை அணைப்பதற்கு யாழ். மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. சிவஞானம் தண்ணீர்த் தாங்கி லொறிகள் இரண்டில் தண்ணீர்ப்பம்புகளைப் பொருத்தித் தீயை அணைப்பதற்கான புதிய முயற்சிகளைச் செய்திருக்கிறார்.

இது தவிர யாழ். மாநகர சபை அமைக்கவிருக்கும் சந்தைக் கட்டிடங்களுக்கிடையில் தீ பரவாமல் தடுப்பதற்கான இடைவெளிகளை ஏற்படுத்துவதற்கும் அவர் திட்டமிட்டிருக்கிறார்.

### விரும்பத்தகாதவர்கள் மீது..

பலதடவை சிறை சென்றவர்கள், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள், எறிகுண்டு, மற்றும் பயங்கர ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுபவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைது செய்து காவலில் வைப்பதற்குப் பொலிசார் உத்தேசித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

### வெளியிடத்து அரசாங்க ஊழியர்கள்..

வெளியிடங்களில் கடமையாற்றி தற்போது இங்கு வந்துள்ள அரசு ஊழியர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் அரைவாசித் தொகையை உடன் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மீதித்தொகை அவர்கள் தொடர்பான திணைக்களங்களுடன் தொடர்புகொண்ட பின்னர் இன்னமும் ஒருவாரத்துக்குள் வழங்கவும் ஏற்பாடுகளை இங்கு வந்த உயர் அதிகாரிகள் குழு மேற்கொண்டுள்ளது.

### விற்பனையாளர்களுக்கு

பத்திரிகை அச்சடிக்கும் தாள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதினாலும் சொற்ப அளவிலேயே கையிருப்பில் அச்சடிக்கும் தாள்கள் இருப்பதனாலும் எமது பத்திரிகை விற்பனையாளர்கள் கோருமளவிற்கு மேலதிகமாக பத்திரிகைப் பிரதிகளை விநியோகிக்க முடியாமலிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகி—ஈழநாடு

இலங்கை நிலைமைபற்றி ஆராய

# அமைச்சர் தலைமையில் தமிழ் எம் பிக்கள் குழு அனுப்புக

## காங்கிரஸ் தலைவர் கோரிக்கை

சென்னை, ஆக. 28 இலங்கையில் தலைதூக்கியுள்ள வன்முறைச் சம்பவங்களினால் அவதியுறும் இலங்கைத் தமிழ் மக்களின் அவல நிலையை நேரில் கண்டறியும் பொருட்டு இந்தியவெளியுறவு அமைச்சர் தலைமையிலான குழுவொன்றை இலங்கைக்கு உடன் அனுப்புமாறு இந்தியக் காங்கிரஸ்கமிட்டியின் தமிழ் நாட்டுத் தலைவர் திரு கருப்பையாமூப்பனார்,மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் தலைமையில் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்கள், எம். பிக்கள் அடங்கிய குழுவை உடன் நியமித்து இலங்கைக்கு அனுப்புமாறும் திரு.மூப்பனார்அரசைக் கேட்டுள்ளார்.

வன்முறையினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குஉதவிப் பணிகளுக்குஏற்பாடுசெய்தால் மட்டும் போதாது; தமிழ் மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும்பாதுகாப்புவழங்க வேண்டுமென்றும் திரு. மூப்பனார் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார். (இ)

## இலங்கைத்தமிழருக்கு அனுதாபம்:

# எம். ஜி. ஆரின் விருந்தை தி. மு. க. பகிஷ்கரிப்பு

சென்னை, ஆக. 28 வன்முறைச் சம்பவங்களினால் அவதியுறும் இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய நிலை குறித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடு தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்களுக்கு நேற்று அளித்த விருந்தைப் பகிஷ்கரித்தனர்

தமிழக சட்ட சபையின் பட்ஜட் மீதான விவாதம் முடிவுற்ற பின்னர் திரு. எம். ஜி. ஆர் வழமைபோல் சகல உறுப்பினர்களுக்கும் விருந்தளித்தார்

இலங்கைத் தமிழ்மக்களின் இன்றைய அவல நிலையில் தம்மால் இந்த விருந்தில் கலந்து கொள்ளமுடியவில்லை என்று தெரிவித்த தி. மு. க. உறுப்பினர்கள், தி. மு. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி தலைமையில் இவ்விருந்தைப் பகிஷ்கரித்தனர்.

தமிழ்நாடு ஆளுனர், சபாநாயகர், மேற்சபைத் தலைவர் உட்பட மற்றும் சகல சட்டசபை உறுப்பினர்களும் இவ் விருந்தில் கலந்துகொண்டனர்.

## பெண்களின் அந்தஸ்து: குழு ஆராய்கிறது

புதுடில்லி, ஆக. 28 இந்தியப் பெண்களின் அந்தஸ்துக் குறித்து ஆராய்வதற்காக மத்திய அமைச்சர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவுக்குப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தலைவராக நியமனம் பெற்றுள்ளார். (இ)

# பூட்டோ 20 லட்சம் லஞ்சம் பெற்றார்?

இஸ்லாமாபாத், ஆக. 28 பாகிஸ்தான் முன்னாள் பிரதம மந்திரி ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ பிரான்ஸ் நிறுவனம் ஒன்றிடமிருந்து இருபது லட்சம் ரூபா லஞ்சம் வாங்கியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகவே ஜனாப் பூட்டோ 20 லட்சம் ரூபாவை லஞ்சம் வாங்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1971ம் ஆண்டு ஜனாப் பூட்டோவினால் இராணுவத்தளபதி ஜெனரல் ஹஸன் இக்குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்

இக்குற்றச்சாட்டு ஆதாரபூர்வமற்றது என்றும் உண்மைக்குப்புறம்பானது என்றும் ஜனாப் பூட்டோ,தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ளார். (இ)

## அகதிகள் நிவாரணம்: ஆசிரிய சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் ''வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகதமிழ்ப்பகுதிகளுக்குவந்துள்ள தமிழமக்களுக்கு ஆசிரியர்கள் தம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும்.''

இவ்வாறு ஆசிரியர்களைக் கோரும் அறிக்கையொன்றை இலங்கைத்தேசிய ஆசிரியசங்கத்தின்யாழ்.மாவட்டக்கிளைத் தலைவர் திரு. வ. கிருஷ்ண பிள்ளை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

''இன்று இலங்கையில் எழுந்துள்ள வன்செயல் சம்பவங்கள் நாட்டில் அமைதியின்மைக்கும் இனஒடுக்குமுறைக்கும் எம்மை இழுத்துச்சென்றுள்ளது. இந் நிகழ்ச்சிபற்றி தேசபக்தியுள்ள எந்த ஒரு நற்பிரஜையும் கவலை அடையாதிருக்கமுடியாது இந்நிகழ்ச்சினால் பாதிக்கப்பட்டு உயிரையும், உடைமையையும் இழந்தோரில் பெரும்பாலோர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத்தினரும், சாதாரணமக்களுமே யாவர் இவர்கள் இன்று யாழ் குடாநாட்டிற்கு அகதிகளாக வந்துள்ளனர். இவர்களுக்குத் தம்மாலான உதவிகளைப் பொறுப்பான ஸ்தாபனங்கள் மூலம் அளிக்குமாறு யாழ். மாவட்ட ஆசிரியர்களை நாம் வேண்டிக்கொள்ளுகின்றோம்

''அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே தகுந்த பாதுகாப்பு, நடவடிக்கையைமேற்கொண்டு யாழ்ப்பாணத்திலேயே இந்த அநாகரிகச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டித்திருந்தால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கமுடியும். பொதுத் தேர்தல் நடைபெற்ற காலந் தொட்டே நாட்டில்வன்செயல்கள் தலைதூக்க ஆரம்பித்தன இச்செயலும் சரிவரக்கட்டுப்படுத்தப்படவில்லை. இத்தவறை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும், எனினும், அரசு இன்று ஒரு பாரபட்சமற்ற கமிஷனை நியமிப்பதை எமது சங்கம் வரவேற்பதுடன் இதில் சம்பந்தப்பட்டோரைத் தண்டிக்கத் தவற கூடாது.

''மீண்டும்நாட்டில்சமாதான நிலைதோன்ற, நாட்டிலுள்ள சகலமக்களும் துவேஷமற்றசிந்தனையுடன் ஈடுபடவேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடும், புனர்வாழ்வு மளிக்க அரசு முன்வரவேண்டும். மேலும் கல்விஇலாகா பாடசாலைகளை செப்டம்பர் மாதம் 5ம் தேதி திறக்க இருப்பதையும்,வெளியூரில்கடமையாற்றி யாழ்ப்பாணம் வந்துள்ள ஆசிரியர்களுக்கு சம்பளத்தின் ஒரு பகுதியை இங்கேயே வழங்க யாழ். கல்வித் திணைக்களம் எடுக்கும் நடவடிக்கையையும நாம் வரவேற்பதோடு இவை பற்றி அவ்வாசிரியர்கள் யாழ். கல்வித் திணைக்களத்துடன் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்புகொள்ளலாமெனத் தெரிவிக்கின்றோம்''.

## குழந்தையின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், திங்கள் ஆண் குழந்தையின் சடலம் ஒன்று, தெல்லிப்பழை கிழக்கிலுள்ள பனைவடலிக்குள் கிடக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றித் தெல்லிப்பழை கிழக்கு கிராமசேவையாளர் திரு. என். கதிரேசுவுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் காங்கேசன்துறை பொலிசாரின் உதவியுடன் குழந்தையின் தாயார் என்று கருதப்படும் ஒரு பெண்ணைக் கைதுசெய்தார்.

இது சம்பந்தமாக நடாத்தப்பட்ட விசாரணையில், சந்தேகத்தின்பேரில் கைதான ஏழாலையைச் சேர்ந்த திருமதி மனோன்மணி, தமது கணவர் குணலிங்கத்தை விட்டுப்பிரிந்து அவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்று வருகிறாரென்று தெரிய வந்துள்ளது

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (இ)

பொது அறிவில்

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

சுழிபுரம், ஞாயிறு யாழ்ப்பாணம் லயன்ஸ் கிளப் ஆதரவில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடாத்தப்பட்ட பொது அறிவு இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 20 பாடசாலைகள் பங்குபற்றின. இவற்றின் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியும், பரியோவான் கல்லூரியும் தெரிவுசெய்யப்பட்டன. 1ம், 2ம் இடங்களைப்பெற்ற பாடசாலைகளுக்கு கேடயமும், மாணவர்களுக்கு பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டன.

## இன்று நல்லூர் மஞ்சம்

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் கந்தசுவாமிகோவில் 10ம் நாள் மஞ்சத் திருவிழா இன்று நடைபெறுகிறது.

நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காரணத்தால் இம்முறை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்லும் பக்தர் தொகை எந்த ஆண்டிலும் இல்லாதவாறு மிகக்குறைவாகவே இருக்கிறது.

## கடைகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் சின்னக்கடை சந்தைக்கு முன்னால் உள்ள தேநீர்க்கடைநேற்றுமுன் தினம் கோஷ்டி ஒன்றினால் நொறுக்கப்பட்டுள்ளது.

யாழ். புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்உள்ள தேநீர் கடைஒன்றும்கொல்லங்கலட்டியிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றும் நேற்று இரவு தீயிடப்பட்டன. (கெ-இ)


## வரி விளம்பரம்

எமது ஸ்தாபனம் 30-8-77 புதன்கிழமை முதல் விவேகானந்தா டெக்ஸ்டைல்ஸ் மேல் மாடியில் (பழைய வேலைத் தலம்) இயங்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். மிஸ்கின்ஸ், 22/1, பெரியகடை, யாழ்ப்பாணம். 6907

### விற்பனைக்கு

இம்மாதMIRROR, STAR & STYLE, EVE'S WEEKLY விற்பனையாகின்றது. குறைவான பிரதிகளே வந்திருப்பதால் உங்கள் பிரதிக்கு முந்துங்கள். சித்ராலயா புக் ஹவுஸ், 38 வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 6906

### தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794


## நிவாரணப் பணிகளில் ஆசிரிய மாணவிகள்

யாழ்ப்பாணம், திங்கள் ''கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இருக்கும் மட்டக்களப்பு, திருமலை, மூதூர், அனுராதபுரம், மாத்தளை, கண்டி ஆகிய பகுதிகளிலிருந்து பயிற்சிபெறும் சகல மாணவிகளும் பாதுகாப்பாக இருப்பதாக'' மேற்படி பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தக்குமாரசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சியாளர்கள், தற்போது நாட்டில் நடைபெற்ற வன்செயல்களினால் அகதிகளாக்கப்பட்டுக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தங்கியிருக்கும் அகதிகளின் நலன்களைக் கவனித்துவருவதால் தமது வீடுகளுக்குச் செல்லாமல் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் திருமதி ஆனந்தக் குமாரசாமிதெரிவித்தார்.


சாந்தி யாழ். நகரி போன்: 7648
எம். ஜி. ஆர். சாவித்திரி நடித்த
தினசரி 10-30, 2-30.
வேட்டைக்காரன்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30
போன்: 7180
முத்துராமன்-சுஜாதா
விஜயகுமார் - படாபட் ஜெயலக்ஷ்மி
நடித்த
மயங்குகிறாள் ஒரு மாது

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
பெண் தெய்வம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு வெள்ளைப் பிரதி)
எமது அடுத்த வெளியீடு
சிவகுமார் சுஜாதா
அன்னக்கிளி

# கூடுதலான முகாம்களை நிறுவ ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் அகதிகள் தொகை அதிகரித்து வருவதால் யாழ்ப்பாணத்தில் மேலும் சில முகாம்களை நிறுவவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக சமூக சேவைப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே அகதிகள் முகாம்கள் நிறுவப்பட்டுள்ள யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ் இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை, கோப்பாய், ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகள் ஆகியவற்றுடன் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியிலும் நேற்று முகாம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது இங்கு சுமார் 100 பேர் வரை அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னமும் 150 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு முகாம் தேவைப்படுவதாகவும் வசதியான ஸ்தாபனங்களின் ஆதரவைத் தேடுவதாகவும் சமூக சேவைப்பகுதி தெரிவிக்கிறது' பூநகரி, கிளிநொச்சிப்பகுதியில் உள்ள முகாம்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ளவர்களுக்குத் தேவையான உணவு, உடை வசதிகளைக் கவனித்திருப்பதாகவும் இவர்கள் தெரிவித்தனர். (ம)

## மாவுக்கு தட்டுப்பாடு இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் ப.நோ.கூ. சமாஜத்தில் போதியளவு மா கையிருப்பில் உள்ளதாக சமாஜத்தின் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். மாவுக்கு எந்தச்சந்தர்ப்பத்திலும் தட்டுப்பாடு நிலவ இடமில்லையெனவும் கூறியுள்ளார்.

பங்கீட்டுக்கான சீனியை சமாஜம் இம்மாதம் பெறமுடியாதநிலையில், கையிருப்பில் உள்ள சீனியை கூப்பனுக்கு அரை ருத்தல்வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் பங்கீட்டு அட்டைக்கு 1 போத்தல் வீதமும், விவசாயிகளுக்கு 1 கலன் வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது. தேங்காய் எண்ணெய் வெளிச்சந்தையில் 7 ரூபாவாக விற்பனையாகும்போது சங்கத்தில் 4 ரூபா 60 சதத்திற்கு குடும்பத்திற்கு அரைப்போத்தல் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. (கெ)

## யாழ். நகரில் காசி ஆனந்தன்

(அரியாலை)

கவிஞர் காசி ஆனந்தன் நேற்று முன்தினம் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் தங்கியிருக்கும் அகதிகளைச் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மற்றும் சில முகாம்களுக்கும் இவர் சென்றார். (இ)

# "அகதிகளுக்கு அரசு உதவியளிக்க வேண்டும்"

## கம்யூ. கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்.

'நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால் பலவகையிலும் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் திரும்பியிருக்கும் தமிழர்களுக்கு அரசாங்கம் எல்லா விதமான உதவிகளையும் வழங்க வேண்டும்' என்று இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி யாழ் பிரதேசக்கிளை காரியதரிசி திரு. அ. வயித்திலிங்கம் விடுத்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சமீபகாலத்தில் நாட்டின் சகல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள துக்ககரமான சம்பவங்களையிட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்குழு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

"இன்றைய நிலையில் நாட்டின் சகலபகுதிகளிலும் சகஜ நிலைமையை உருவாக்குவதே முதற்பணியாகும்.

"எமது பிரதேசத்தில் பலர் அகதிகளாக வந்திருக்கும் இந்நிலையில், அவர்களுக்கும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் குறிப்பாக நஷ்டப்பட்டும் வேலையிழந்தும் இருப்பவர்களுக்கும் அவர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என வற்புறுத்துகின்றோம். இது தொடர்பாக சகல வர்த்தக ஸ்தாபனங்களும் தமது முழு ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும் அதே நேரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கவும் வற்புறுத்துகின்றோம்.

மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்ததொழிற்சங்கங்களும் மற்றும் பொதுஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து தேவையான ஆலோசனைகளைக் கூறவேண்டும்." (கூ.)

## நல்லூர் ப. நோ.

## கூ. ச. ஊழியர்

## அகதிகளுக்கு உதவுவர்

யாழ்ப்பாணம், திங்கள்

வன்முறைச்சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடியவகையில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தமக்கு அரசிடமிருந்து கிடைக்கவிருக்கும் பரிசுப் பணத்தின் பெரும்பகுதியை கொடுப்பது என்று தீர்மானித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டு முகாம்களில் ஆதரவற்றநிலையில்உள்ள மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கு இரண்டு ஊழியர்களை கட்டாய லீவில் அனுப்பிவைக்குமாறு சங்க நிர்வாகத்தை சங்கத்தின் ஊழியர்கள் கேட்டுள்ளார்கள்.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய முகாம்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மா, சீனி, விறகு, தேங்காயெண்ணை ஆகியன பலநோக்குக்கூட்டுறவுச்சங்க ஊழியர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்தகைய உணவுப் பொருட்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்கள். (கா-இ)

# கப்பல் மார்க்கமாக யாழ். வெங்காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், மிளகாய் ஆகியன விமான மார்க்கமாகவும் கப்பல் மூலமும் கொழும்புக்கு அனுப்பட்டன.

நேற்று முன்தினம் விமான மூலம் 11 ஆயிரம் ருத்தல் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

இந்த வெங்காயம் நேற்று கொழும்பில் விற்பனைத்திணைக்கள சில்லறைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

சந்தைப்படுத்தும் திணைக்கள ஆணையாளர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## அகதிகள் நிராவம்

யாழ்ப்பாணம், திங்கள்

காரை. மறுமலர்ச்சி மன்றத்தினர் காரைநகர் மக்களிடமிருந்து உடை, நிதி உணவுப் பொருட்கள் முதலியவற்றைச் சேகரித்து யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலுள்ள அகதிகள் முகாமில் ஒப்படைத்துள்ளார்கள். (இ)

# தென்னிந்திய திருச்சபை 5 ஆயிரம் ரூபா நிதியுதவி

அரியாலை, ஞாயிறு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தென்னிந்திய திருச்சபை, அகதிகள் வாழ்வுப் புனரமைப்புச்சபைக்கு ரூபா ஐயாயிரம் நிதியுதவி வழங்கியுள்ளது.

வைத்திய கலாநிதி யோகு பசுபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சபையினர் நிதி சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வழங்கப்படும் நிதிகளுக்கு உடனுக்குடன் ரசீதுகள் வழங்கப்படுகின்றன.

# கிளிநொச்சி முகாம்களில் நிவாரணப் பணி!

அரியாலை, ஞாயிறு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய அகதிகள் முகாமிலிருந்து உணவுப் பொருட்களும், உடைகளும் கிளிநொச்சிப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் அகதிகள் முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன

அரஸ்கோ ஸ்தாபன லொறி மூலம் எடுத்துச்செல்லப்பட்ட உணவுப்பொருட்கள் விநியோகத்தை சமூகசேவைப்பகுதி உத்தியோகத்தர்களும், உடை, பாய் விநியோகத்தை ரோட்டறி மாதர் கழகப்பிரதிநிதிகளும் மேற்கொண்டனர்.

ரோட்டறி மாதர் கழகத்தைச் சேர்ந்த திருமதிகள் சண்முகலிங்கம், ராஜன், பாலேந்திரா ஆகியோரும், ரோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் அரசரத்தினம், ராஜன் ஆகியோர் சமூகசேவைப்பகுதி உத்தியோகத்தருடன் சென்று அகதிகளுக்கு ஆறுதல் கூறியதுடன் பொருட்களை நேரில் விநியோகம் செய்தனர்.

வைத்திய கலாநிதி விஜயராசா நோயாளர்களைப்பரிசோதித்து மருந்துகள் வழங்கினர்.

அகதிகளுக்கு வேண்டிய உடைகள் வழங்குவதில்யாழ்ப்பாணப்பகுதி மக்கள் பெரும் அக்கறைகாட்டிவருகின்றனர்.

யாழ்ப்பாணம்பரியோவான் கல்லூரியில் வணக்கத்துக்குரிய ஆர்ச் டீக்கன் ஜே.ஜே ஞானப்பிரகாசம் தலைமையிலுள்ள குழுவினர் உடைகளைச்சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை சேகரிக்கப்பட்டுள்ள ஆடைகளில் ஒரு பகுதி இன்று பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள முகாம்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. (இ)

## உணவு அன்பளிப்பு

அரியாலை, ஞாயிறு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் தங்கியிருக்கும் அகதிகளுக்கு அரியாலை மேற்கு கிராமவாசிகள் உணவுப் பார்சல்களை வழங்கினர்.

காந்தி சனசமூக மாதர் சங்கத்தினரும் மற்றும் பலரும் உணவுகளைச் சமைப்பதிலும், உணவுப் பார்சல்களை நேரில் வழங்குவதிலும் பங்கெடுத்து உழைத்தனர்.

## மீண்டும் படக்காட்சி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். நகரில் உள்ள தியேட்டர்களில் இன்று முதல் படக்காட்சிகள் காண்பிக்கப்படும் என்று தியேட்டர் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# பத்திரிகை, சஞ்சிகைகள்

அந்நியச் செலாவணி விரையமாவதைத் தடுப்பதற்கென முந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பலவற்றில் இந்தியாவிலிருந்து-குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் இங்கு வந்துகொண்டிருந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், முதலியவற்றைக் கட்டுப்படுத்தியதும் ஒன்றாகும்.

ஒரு சில பத்திரிகைகள் மாத்திரமே தரமும் தகுதியும் வாய்ந்தவை என்று கூறி தரமற்றவை எனப் பலவற்றைக் கட்டுப்படுத்திவிட்டார்கள்.

உள்ளூர் எழுத்தாளர்களுக்கும், பிரசுரகர்த்தாக்களுக்கும் ஊக்கமளிக்கும் நடவடிக்கை இது என்றும் விளக்கம் தரப்பட்டது

தரம்-தகுதி என்ற சொற்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின் படி பார்க்கையில், தமிழ்நாட்டிலிருந்து வராமல் தடுக்கப்பட்ட சில பத்திரிகைகளை விடத் தரமும் தகுதியும் குறைந்த பல சஞ்சிகைகளும்-பத்திரிகைகளும் நம் நாட்டிலேயே வெளிவர ஆரம்பித்தன. அந்தவகையில் 'நம்நாட்டு வாசகர்களின் ரசனையை அவர்கள் கெடுக்கவேண்டாம் அதனை எங்கள் நாட்டுக்காரர்களே செய்து கொள்ளட்டும்' என்று கைவிட்டது போல் ஆகிவிட்டது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் தடுக்கப்பட்ட தமிழ்நாட்டுப் பத்திரிகைகளையே வேறு வழிகளில் தருவித்துக்கொள்ளும் சிலர் அவைகளிலுள்ள விஷயங்களை 'வெட்டி ஒட்டி' தம் சொந்தச்சரக்காக வெளியிட்டுப் பணமும் சம்பாதித்துவருகிறார்கள்.

'தரம் தகுதி' என்ற சொற்கள் ஆபாசமான விஷயங்களையும், அறிவை மழுங்கடிக்கும் அம்சங்களையும் கொண்டு வெளிவரும் பத்திரிகை-சஞ்சிகைகளை மாத்திரம் குறிப்பிடுவதாக இருக்கவில்லை.

அரசியல் பொருளாதார விஷயங்களில் சில கோட்பாடுகளைப் பிரசாரம் செய்யாத பத்திரிகை-சஞ்சிகைகளும் இந்தக் கணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளன.

கட்சி அரசியல் நடைமுறையிலுள்ள ஒரு ஜனநாயக நாட்டில் மக்களை 'நீங்கள் இந்தவகையான பத்திரிகை-சஞ்சிகை, நூல்களைத்தான் படிக்கவேண்டும்' என்று வற்புறுத்துவதோ - அல்லது அவர்களுக்குஅப்படியான ஒரு நிலைமையை உருவாக்குவதோ மக்கள் மத்தியில் அதிருப்தியையும் அவநம்பிக்கையையும்தான் தோற்றுவிக்கும்-மாறாக மக்கள் தாமே அவ்வாறான பத்திரிகை - சஞ்சிகைகளை வாங்கிப் படிக்காமல் விடுவதற்கான பிரசாரம் ஓரளவு பயனளிக்கக்கூடும் என்றாலும் கருத்துச் சுதந்திரமும், அறிவுச்சுதந்திரமும் பேணப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படும் இந்தக்காலத்தில் மக்கள் தாம் விரும்பியவற்றை வாங்கிப்படிக்க வசதியிருக்கவேண்டும்.

அதிலும் தமிழ்நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளை இங்குள்ள தமிழ்மக்கள் வாங்கிப் படிக்க பெரிதும் விரும்புகிறார்கள். அங்கு காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்கள், அபிவிருத்திகள் கலாச்சார நிகழ்ச்சிகள் பற்றி அறிவதில் இவர்களுக்கு நிறைய அக்கறையுண்டு.

உள்நாட்டு எழுத்தாளர்கள்- பத்திரிகையாளர்கள் பிரசுரகர்த்தாக்கள் கடந்த காலத்தில் எந்த அளவில் பயனடைந்தார்கள் என்பது பற்றி ஓர் ஆய்வு நடத்தினால் பலருசிகரமான தகவல்கள் வெளிவரக்கூடும். பொதுவாகக்கூறின், மக்கள் நலனையே கருத்தில் கொண்டு, தூற்றுதல்போற்றுதல்களினால் நிலைதளராமல் வெளிவரும் பத்திரிகை சஞ்சிகைகள் சிறிதளவும் பயன்பெறவில்லை யென்பது அப்பட்டமான உண்மை. அதிலும் குறிப்பாக தலைநகருக்கு வெளியிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளும் - சஞ்சிகைகளும் கவனிப்பாரற்றுப் போய்விட்டன.

எனவே மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை சஞ்சிகைகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவதுடன் உள்நாட்டு எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள். பிரசுரகர்த்தாக்கள் போன்றோரின் நலனுக்கென ஆக்கபூர்வமான ஊக்கமளிக்கும் திட்டங்களை புதிய அரசு செயல்படுத்தும் என்று எதிர்பார்ப்போம்.

-ரீ எஸ். பீ

# "தமிழர் விரோதப்போக்கு தலை தூக்கியது துரதிருஷ்டம்"

## இலங்கை ஹைகமிஷனர் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது"

புவனேஸ்வரம், ஆக. 28

"இலங்கையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள், கலவரங்கள் குறித்து இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் விரிவான முறையில் விபரங்களைச் சேகரித்து வருகின்றார். அவரது அறிக்கை எமக்கு கிடைத்ததும், இலங்கையில் இந்திய இனத்தவர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் எவ்விதமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற விபரம் தெரியும். இதன் பின்னர் இந்திய அரசு ஒரு அறிக்கை வெளியிடும்" என்று மத்திய அமைச்சர் திரு. சமரேந்திரகுண்டு இன்று இங்கு கூறினார்.

ஒரிஸாவுக்கு விஜயம்செய்த அமைச்சர் சமரேந்திரகுண்டு, புவனேஸ்வரத்தில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது இலங்கையில் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், அங்குள்ள மலைநாட்டுப் பகுதிகளில்வாழும் இந்திய இனத்தவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்துப்பற்றியும், மலைநாட்டுத்தமிழர்கள் அகதிகளாக வடக்கு மாகாணம் சென்று கொண்டிருப்பது சம்பந்தமாகவும் நிருபர்கள் கேள்விகேட்டனர்.

நிருபர்களின் கேள்விக்கு அமைச்சர் நிதானமாகப் பதிலளித்தார்.

''இலங்கையில் தமிழர் விரோதப்போக்கு தலைதூக்கியிருப்பது பெரும் துரதிருஷ்டம்'' என்று ஆரம்பித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:

''இலங்கையில் ஏற்பட்ட வன்செயல்கள், கலவரங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பாரத அரசாங்கமும் தொடர்புகொண்டுள்ளது. இதுமட்டுமின்றி கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடமும் விரிவாக அறிக்கையொன்றை மத்திய அரசு கோரியுள்ளது.

''இலங்கையில் மாமூல் நிலைமை விரைவில் ஏற்பட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாக பாரத அரசுக்கு இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. அங்கு சுமுகமான நிலை விரைவில் ஏற்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்போமாக.

''கொழும்பிலுள்ள நமது ஹைகமிஷனர் முக்கியமாக மலையகப் பகுதிகளுக்கும் மற்றைய இடங்களுக்கும் நேரில் சென்று விபரங்களைச் சேகரித்து வருகின்றார். அவர் வேண்டிய இடங்களுக்குச் செல்லவும், எவரையும் சந்திக்கவும் இலங்கை அரசு எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் பூரண அனுமதிவழங்கியுள்ளது. அவரது அறிக்கை எமக்கு கிடைத்ததும், மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பது பற்றி மத்திய அரசு முடிவு செய்யும்.

''இலங்கையும் இந்தியாவும் அண்டை நாடுகள் நீண்டகாலத் தொடர்பு உடையன. இரு நாடுகளும் பலதுறைகளிலும் ஒத்துழைத்து வருகின்றன. இந்த உறவு நீடிக்க வேண்டும்'' என்று அமைச்சர் சமரேந்திர குண்டு நிருபர்களிடம் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### பண்டிதர் பொன். சின்னத்துரை

தெல்லிப்பழை வேலாவியூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. பண்டிதர் பொன். சின்னத்துரை அவர்கள் முருகபதமடைந்து விட்டார்கள். இவர் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆசிரியை திருமதி சிவயோகம் அவர்களின் அன்புக்கணவரும், அரியநாதன், நந்தினி ஆகியோரின் அருமைத்தந்தையுமாவார். அன்னார் 27-8-77 சனிக்கிழமை மாரடைப்பால் காலமானார். ஈமக்கிரியைகள் அன்று மாலை நிறைவேறின. இச்செய்தியை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: த. பாலகணேசன், யோகமனை புலோலிதெற்கு. 6908

## மரண அறிவித்தல்

### டாக்டர் ச. பொன்னம்பலம்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை தற்போதைய வைத்திய அதிகாரி டாக்டர் ச. பொன்னம்பலம் காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக்கணவரும், சுந்தரலிங்கம் (தென்னை, ஆராய்ச்சி சபை) சொர்ணலிங்கம், கணேசலிங்கம் (மகாவலி அபிவிருத்திச் சபை) ஆனந்தலிங்கம், சற்குணதேவி, பஞ்சலிங்கம் ஆகியோரின் தகப்பனாரும், வசந்தி, குணராணி, ஜெயசுந்தரி சண்முகநாதன் ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக டேவிற் வீதி, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து இன்று மாலை 5 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 6909

## பிரிவினை கோரிக்கையை தடைசெய்ய வேண்டுமாம்!

கொழும்பு, ஞாயிறு

'தனித் தமிழ்நாடு'' கோரிக்கையை சட்டத்தின் மூலம் தடைசெய்யவேண்டும்''என்று வண. மடிகே பன்னசீக மகா நாயக்கதேரோ பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

இனிமேல் எவராவது பிரிவினைக்கோரிக்கைபற்றி பேசினாலோ எழுத்துமூலம் தெரிவித்தாலோ அவர்கள்மீது சட்டமூலம்நடவடிக்கை எடுக்க அரசு தயங்கக்கூடாது என்றும் இவர் தமது மகஜரில் கேட்டுள்ளார். அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

'பிரிவினைக் கோரிக்கையை சட்டத்தின்மூலம் தடைசெய்வது தனிமனித உரிமைகளைத் தடைசெய்வதாக இருக்கும் எனக் கருதலாம். ஆனால் இக் கோரிக்கை மனிதஉயிர்களைப் பறிக்கக்கூடியவிதத்தில்மேலும் பல சம்பவங்களைத் தோற்றுவிக்கலாம்

யாழ்.குடாநாட்டிலும், வவுனியாவிலும் பெரிய குடியேற்றத்திட்டங்களைநிறுவி அங்கு தமிழ்-சிங்கள-முஸ்லிம் மக்கள் குடியேற்றப்படவேண்டும்.'

(இ)

## வித்தியானந்தன் தலைவராக நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் புதிய தலைவராக பேராசிரியர் சு வித்தியானந்தன் நியமிக்கப் பட்டுள்ளார்.

யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் க கைலாசபதி ராஜினாமாச்செய்து வெளிநாடு சென்றிருந்த சமயம் யாழ். வளாக மனிதப் பண்பியல் பீடத்தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா பதில்தலைவராகக் கடமையாற்றினார்.

தற்போது தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வித்தியானந்தன் பேராதனை வளாக தமிழ்துறைப் பேராசிரியராக இருந்தவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (கா)

## கண்டி அகதிகள்

கண்டி, ஞாயிறு

கண்டியில் உள்ள அகதிகள் சகலரும் இப்போது பொல்கொல்ல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கண்டி சில்வெஸ்டர் கல்லூரி, ரிநிரிட்டி கல்லூரி, அம்பிட்டியா ஆகிய இடங்களில் அகதிகளாக இருந்தவர்களே பொல்கொல்ல கலாசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

(இ)

## மலையக அகதிகளை நேரில் சந்தித்தார்

கண்டி, திங்கள்

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால், மலையகமக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டு, தமது உடைமைகளையும், வீடு வாசல்களையும் இழந்து அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதை நேரில் அறியும் பொருட்டு கோப்பாய் எம்.பி. எஸ். கதிரவேலுப்பிள்ளை மலையகம் வந்துள்ளார்.

இவர் மலையகத்தில் சில தினங்கள் தங்கி நிலைமைகளை விரிவாக ஆராய்வார்.

நேற்றுமுன்தினம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து யாழ்ப்பாண நிலைமைபற்றி விளக்கிய திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை ஊரடங்கு சட்டத்தை யாழ்ப்பாணத்தில் தளர்த்தவேண்டியதற்கான காரணங்களையும் பிரதமருக்கு எடுத்துக் கூறினார்.

இச்சந்திப்பின்போது, சாவகச்சேரி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு வி என் நவரத்தினமும் கூடஇருந்தார். (கெ)

## தகவல் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், திங்கள்

நாட்டில் தலை தூக்கிய வன்செயல்களின்போது இனவாத அடிப்படையில் தாக்கப்பட்ட சகல தமிழ்மக்களுக்கும் நிவாரணம் அளிக்குமுகமாக தமிழர் விடுதலைக்கூட்டணி ஒவ்வொருவரிடமிருந்தும் தகவல்களைச் சேகரித்து வருகின்றது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தத்தமது தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர்களிடம் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, தகவல்களை எழுத்துமூலமாக அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இவ்விதமாக ஒவ்வொருவரும் வழங்கும் தகவல்கள் அரசாங்கத்தால் அமைக்கப் படவிருக்கும் விசாரணைக் கமிஷனிடம் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

**ஆசிரியருக்குக் கடிதம்:**

## ஒரு அவசரத் தேவை

வடஇலங்கையின் பிரதான நகரம் யாழ்ப்பாணம், இலங்கையின் முக்கிய நகரங்களுள் தலைநகர் கொழும்புக்கு அடுத்தபடியாக சகல காரியங்களிலும் முதலிடம் வகிப்பது யாழ்ப்பாணம் என்பது கண்கூடு.

இந்த நகருக்கு, பல மாநகர சபை முதல்வர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தும், பல அரசாங்க உறுப்பினர்கள் அதிகாரம் வகித்தும் அல்லது பல அரசாங்க அதிபர்கள் கடமை செலுத்தியும் இன்று வரை ஒரு முக்கிய விஷயத்தை நிறைவேற்றாமல் இருப்பது பெரும் கவலைக்குரிய விஷயமாகும்.

யாழ்ப்பாண நகரத்திற்குள்ளேயே பல தொழிற்சாலைகள் பொருள் உற்பத்தி ஸ்தாபனங்கள் உள்ளதும், அவைகளில் கடமைபுரிவோரின் பெருந்தொகையான அளவும், அந்த ஸ்தாபனங்களினால் உற்பத்தி செய்யப்பட்டு வெளிவரும் பொருட்களின் பெறுமதியையும், மற்றும் விபரங்களையும் மேற்கூறிய அதிகாரிகள் எல்லோரும் புரிவார்கள்.

இந்நகரிலும், இதைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் பல தீ விபத்துக்கள் ஏற்பட்டு பல வருடங்களாக மக்களுக்கு நஷ்டத்தை விளைவித்துள்ளது இதுவும் எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இவ்விதமிருந்தும், இன்று வரை, யாழ்ப்பாண நகரத்திற்கு-ஒரு தனிப்பட்ட தீயணைப்புப்படை நிரந்தரமாக ஏற்படுத்தி வைக்காததின் மூல காரணமென்னவென்று புரியவில்லை.

இன்று சென்ற நாட்களில் அதற்கு முன்பு ஏற்பட்ட குழப்பங்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெருந்தீவிபத்துகளைப்பற்றி முன்பு கூறிய அதிகாரிகள் யாவரும் விபரம் அறிவார்கள்.

27-8-1977 சனிக்கிழமையன்று நடந்த பெருந் தீவிபத்தும் எல்லோரும் அறிந்ததே.

ஒரு வேளை, பல குழப்பங்களின் மத்தியில் இவ்விஷயம் அதிகாரிகளின் மனதில் தோன்றுவிட்டாலும் இதற்குப் பிறகாவது, உடனடியாக யாழ்ப்பாணத்திற்கென்று, தனிப்பட்ட தீயணைப்புபடைச்சேவையை, அதற்குரிய வாகனங்களுடன் காலதாமதமின்றி அனுப்பிவைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

— இ. சேவியர்
பெர்னாண்டோ
குருநகர்.

## சம்பளம் வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்.

நாட்டில் நடைபெற்ற வன்செயல்களினால், பாதிக்கப்பட்ட சகல தமிழ் அரசாங்க ஊழியர்களின் வரவு பதிவுக்கும், இம்மாத சம்பளம் வழங்குவதற்காகவும், சகல திணைக்களங்களுடனும் யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா நடவடிக்கை எடுத்து வருகின்றார் இது பற்றிய சகல விபரங்களையும், யாழ்ப்பாண செயலகத்தில் காரியாலய உதவியாளருடன் தொடர்பு கொண்டு சகல தாஸ்தாவேஜிகளையும் பூர்த்தி செய்யுமாறு கோரியுள்ளார் நேற்றைய 'ஈழநாடு' தினசரியில், திரு. கிருஷ்ண பிள்ளை என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானதென்று அறிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka